<u>செய்தி வெளியீடு:797</u> <u>25.908</u>

மின் கலம் மூலம் இயங்கும் வாகனங்கள் இயற்கையாகவே, சுற்றுபுற சூழலை மாசுப்படுத்தாததாகவும், ஒலி எழுப்பாததாகவும் அமைந்துள்ளது. இதன் வேகம் மணிக்கு 25 கிமீ முதல் 40 கிமீ வரையிலான மிதமான வேகத்தில் அமைந்துள்ளதால் இவை சாலை பாதுகாப்பிற்கேற்ற வகையில் சாலையில் இயக்க உகந்ததாக உள்ளது. இத்தகைய வாகனங்கள் அதிக அளவில் இயக்கப்படவேண்டும் என்ற நோக்கில், சிறந்த முறையிலும், உத்வேகத்துடனும் அரசு தனது கொள்கையினை செயல்படுத்தி இத்தகைய ‘‘மின்கலம்’’ மூலம் இயங்கும் வாகனங்களை பதிவு செய்ய அனுமதி வழங்கியுள்ளது.

2. அரசாணை எண் 1156 உள் (போக்குவரத்து -1) துறை நாள் 11.09.2008ன்படி மேற்படி வாகன பதிவின் பொருட்டு தமிழ் நாடு மோட்டார் வாகன வரிச் சட்டம் 1974 (த.நா.ச 13/74) பிரிவு 20 உட்பிரிவு I ல் தகுந்த மாற்றம் செய்யப்பட்டு அதன் அறிவிக்கையினை வெளியிட்டுள்ளது.

3. எரிபொருள் மூலம் இயங்கும் மோட்டார் சைக்கிள் மற்றும் போக்குவரத்து அல்லாத 4 சக்கர வாகனங்களுக்கு வசூலிக்கப்பட்டு வரும் ஆயுள் வரியில் 50% வரி தள்ளுபடி செய்து 50% வரி மட்டும் ஆயுள் வரியாக மின்கலம் மூலம் இயங்கும் மோட்டார் சைக்கிள் மற்றும் 4 சக்கர வாகனங்களுக்க வசூல் செய்யப்படும்.

இவ்வுத்தரவு 12.09.08 முதல் அமுலுக்கு வருகிறது. அரசாணை நகல் இத்துடன் இணைக்கப்படுகிறது.

ஒம்/- சி.பி.சிங்
போக்குவரத்து ஆணையர்

*I*ssued by :DIPR CHENNAI.